## கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு

**வழக்கு எண் O.S.No.260/2012 P.W.1**

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.V.பிரதாப், என்பவரால் வாக்குமூலம் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதிகள் தரப்பில் சாட்சியின் வாக்குமூலம் 1873ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | சீனிவாசன் குருசாமி | தொழில் |
| த.பெ. | | மதம் |
| கிராமம் | | சாதி |
| வயது | | வட்டம் |

**முதல் விசாரணை - 25.06.2024**

நான் இந்த வழக்கில் வாதிகளின் பொது அதிகார முகவர். இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 1 முதல் 32 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். அவற்றை வாதிகள் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. Ex.A.1 – Certified copy of Sale deed executed by Kanniammal and others infavour of Ramasamy Naicker dated 11.11.1919.
2. Ex.A.2 – Certified copy of Sale deed executed by Duraisamy Naicker and Kirutappa Naicker infavour of Veerammal dated 28.07.1941.
3. Ex.A.3 – Certified copy of FMB Sketch for old survey no.70, Madipakkam Village dated 28.09.1957.
4. Ex.A.4 – Certified copy of Sale deed executed by Mari Naicker and Duraisamy Naicker infavour of K.B.Gobinath dated 12.04.1961.
5. Ex.A.5 – Certified copy of Sale deed executed by K.B.Gobinath infavour of Kanagavalli dated 21.06.1961.
6. Ex.A.6 – Certified copy of Sale deed executed by K.B.Gobinath infavour of S.N.Kumar dated 23.06.1961.
7. Ex.A.7 – Certified copy of Sale deed executed by K.B.Gobinath infavour of Nageswari Shanmugam dated 23.06.1961.
8. Ex.A.8 – Certified copy of Sale deed executed by Veerammal infavour of K.B.Gobinath dated 27.06.1961.

9. Ex.A.9 – Certified copy of Sale deed executed by K.B.Gobinath infavour of Alexander James dated 08.12.1961.

10. Ex.A.10 – Certified copy of Sale deed executed by K.B.Gobinath infavour of C.S.Rao dated 05.01.1962.

11. Ex.A.11 – Certified copy of the plan inrespect of Doc.No.34/1962 dated 05.01.1961.

12. Ex.A.2 – Certified copy of C.S.Rao executed the WILL infavour of the plaintiff dated 18.07.1990.

13. Ex.A.13 – Certified copy of Sale deed executed by defendants 7 to 9 infavour of 13th defendant (Krishnammal) dated 19.11.1999.

14. Ex.A.14 – Certified copy of Sale deed executed by defendants 7 to 9 infavour of 14th defendant (Ramani) dated 19.11.1999.

15. Ex.A.15 – Certified copy of Sale deed executed by defendants 7 to 9 infavour of 15th defendant (Durai Raj) dated 19.11.1999.

16. Ex.A.16 – Certified copy of Sale deed executed by 10th defendant on behalf of the defendants 7 to 9 infavour of 11th defendant dated 29.03.2001.

17. Ex.A.17 – Certified copy of Sale deed executed by 10th defendant on behalf of the defendants 7 to 9 infavour of 11th defendant dated 07.07.2004.

18. Ex.A.18 – Original Death Certificate of C.S.Rao dated 08.12.2004.

19. Ex.A.19 – Certified copy of Sale deed executed by 10th defendant on behalf of the defendants 7 to 9 infavour of 111th and 12th defendants dated 08.08.2007.

20. Ex.A.20 – Certified copy of Settlement Deed executed by the 7th defendant in favour of 8th defendant dated 01.08.2008.

21. Ex.A.21 – Certified copy of Rectification deed executed by the 7th defendant infavour of 8th defendant dated 05.10.2010.

22. Ex.A.22 – Certified copy of Settlement deed executed by the 12th defendant infavour of 11th defendant dated 22.06.2011.

23. Ex.A.23 – Original Legal heirs Certificate of C.S.Rao dated 26.10.2010.

24. Ex.A.24 – Xerox copy of Report to submitted by the Revenue Inspector to Tasildar, Sholinganallur dated 03.01.2011.

25. Ex.A.25 – Xerox copy of Report from Tasildar to Revenue Divisional Officer dated 13.01.2011.

26. Ex.A.26 – Xerox copy of Proceedings of Revenue Divisional Officer inrespect of the suit

property dated 19.01.2011.

27. Ex.A.27 – Xerox copy of Sale deed executed by the 13th defendant infavour of 21st defendant dated 25.11.2011.

28. Ex.A.28 – Certified copy of Sale deed executed by the 13th defendant infavour of 21st defendant dated 25.11.2011.

29. Ex.A.29 – Certified copy of Sale deed executed by the 13th defendant infavour of 21st defendant dated 25.11.2011.

30. Ex.A.30 – Original Encumbrance Certificate issued by SRO Velacherry dated 08.12.2011.

31. Ex.A.31 – Certified copy of SLR Extract of Madipakkam Village issued by Collectrate, Kancheepuram.

32. Ex.A.32 – Certified copy of Information obtained under the right to Information Act for the Proceedings No.GO.No.656/09.

(வா.சா.ஆ.12 உயில் சான்றிட்ட நகல் தாக்கல் செய்திருப்பதால், அசல் ஆவணம் தாக்கல் செய்யாததால் 1 முதல் 3, 14 மற்றும் 15 பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு, ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

(வா.சா.ஆ.24 முதல் வா.சா.ஆ.26 ஆவணங்கள் ஜெராக்ஸ் நகல் என்பதால் 1 முதல் 3, 14 மற்றும் 15 பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு, ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**1 முதல் 3, 14 மற்றும் 15 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

14 மற்றும் 15 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

முதல் வாதி என்னுடைய Sister-in-law, 2ம் வாதி என்னுடைய மனைவி ஆவார். 1, 2 வாதிகள் எப்பொழுது எனக்கு பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்தார்கள் என்றால் 2010ம் ஆண்டில் பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்தார்கள். 1, 2 வாதிகளை சாட்சியாக விசாரிக்காததற்கு ஏதேனும் காரணம் உள்ளதா என்றால் என் மனைவிக்கு தெரிந்த விவரங்கள் அனைத்தும் எனக்கும் தெரியும் என்பதால் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். முதல் வாதிக்கு தெரிந்த விவரங்களை என்னால் சொல்லமுடியாது என்றால் 1, 2 வாதிகளுக்கு தெரிந்த விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்பதால் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். பொது அதிகாரம் பெற்ற முகவர் என்ற அடிப்படையில் நான் சாட்சியம் அளிப்பதால் பொது அதிகாரம் எழுதி கொடுத்த தேதிக்கு பின்னர் உள்ள விவரங்களை குறித்து தான் நான் சாட்சியம் அளிக்கமுடியும் என்று சொன்னால் சரியல்ல. எனக்கும், 2ம் வாதிக்கும் எந்த ஆண்டு திருமணம் நடந்தது என்றால் 1.6.1990 அன்று திருமணம் நடந்தது. வாதிகள் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் வழக்கு சொத்து எங்களுக்கு உரிமையானது என்றும், 7 முதல் 9 பிரதிவாதிகள் ஏற்படுத்திய கிரய பத்திரம் மற்றும் அதன் பிறகு ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் null and void என்றும், எங்களுடைய கிரய பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள சர்வே எண் தவறானது என்பதால், அதை திருத்துவதற்காகவும் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். என்னுடைய வழக்குரை பத்தி 4ல் பைமாஸ் எண்.1265/15 அதற்கு இணையான சர்வே எண்.64/2ல் துரைசாமி நாயக்கர் மற்றும் கிருஷ்டப்ப நாயக்கருக்கு பாத்தியப்பட்டது என்றும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பைமாஸ் எண்.1265/15க்கு அதற்கு இணையான சர்வே எண்.64/2 என்று காண்பிப்பதற்கு இணையான SLR ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. மேற்படி சொத்தை துரைசாமி நாயக்கர் மற்றும் கிருஷ்டப்ப நாயக்கர் ஆகியோர்கள் 1941ல் வீரம்மாள் என்பவருக்கு கிரயம் கொடுத்தார்கள் என்பதுதான் வழக்கு என்றால் அது இல்லை. மேற்படி வீரம்மாள் முதல் பிரதிவாதியின் தகப்பனாரான கே.வி.கோபிநாத்திற்கு 1961ல் கிரயம் கொடுத்தார் என்பதுதான் வழக்கு என்று சொன்னால் அது மட்டும் வழக்கில்லை, மற்ற விவரங்களும் உள்ளது. எனது

வழக்குரையில் பழைய சர்வே எண் 70/1 என்றும், பைமாஸ் நம்பர் 1265/15 மடிப்பாக்கம் கிராமம் சொத்தானது முதலில் கானியம்மாள் என்பவருக்கு உரிமையானது என்றும் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி சர்வே எண் 70/1 என்றும், பைமாஸ் நம்பர் 1265/15 என்பதை குறிப்பிடுவதற்கு SLR தாக்கல் செய்துள்ளேனா என்றால் தற்போது இல்லை.

**(14 மற்றும் 15 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)**

<u>14 மற்றும் 15 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

எனது வழக்குரையில் பத்தி 6ல் கன்னியம்மாள், முனுசாமி நாயக்கர், கோபால் நாயக்கர் ஆகிய மூவரும் சேர்ந்து 11.11.1919ல் ராமசாமிக்கு வழக்கு சொத்தை கிரயம் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சொல்லப்பட்டுள்ளது. ராமசாமி நாயக்கருக்கு மாரி நாயக்கர் மற்றும் துரைசாமி நாயக்கர் ஆகிய இரு வாரிசுகள் என்று சொல்கிறேன் என்றால் சரிதான். மேற்படி மாரி நாயக்கரும், துரைசாமி நாயக்கரும் சொத்துக்களை பாகம் பிரித்து கொண்டார்கள் என்பதற்கு பாகப்பிரிவினை பத்திரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பாகப்பிரிவினை பத்திரம் தாக்கல் செய்யவில்லை என்று நினைக்கிறேன், ஆனால் பாகப்பிரிவினை செய்த பிறகு மாரி நாயக்கர் பட்டா எண்.400, சர்வே எண்.70/2, துரைசாமி நாயக்கர் பட்டா எண்.398, சர்வே எண்.70/1 வாங்கியுள்ளார். சர்வே எண்.70/1 மற்றும் 70/2 ஆகிய சொத்துக்களை முதல் பிரதிவாதியின் தகப்பனாருக்கு மாரி நாயக்கரின் வாரிசுகளும், துரைசாமி நாயக்கரின் வாரிசுகளும் 12.4.1961ல் கிரயம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். சர்வே எண்.64, 65, 69, 70/3, 99 மற்றும் 101 ஆகிய சர்வே எண்களில் அடங்கிய 3 ஏக்கர் சொத்துக்களை வீடு கட்டும் மனை பிரிவுகளாக பிரித்தார்களா என்றால் பிரித்தார்கள். அந்த சொத்திற்கும், எங்கள் சொத்திற்கும் சம்பந்தம் இல்லை. எனது வழக்குரை பத்தி 3ல் பிளாட் நம்பர் 404, பைமாஸ் எண்.1265/7, பழைய சர்வே எண்.70/1, புதிய சர்வே எண்கள். 70/4பி, 4சி, 4டி, 4ஏ1, 4ஏ2 மற்றும் 4ஏ3 ஆகிய சொத்துக்கள் வாதிகளுக்கு சொந்தமான சொத்துக்கள் என்பதுதான் எனது வழக்கு என்றால் சரிதான். என் மாமனார் வாங்கிய வா.சா.ஆ.10 கிரய பத்திரத்தில் பைமாஸ் எண்.1265/7, பழைய சர்வே எண்.70/1, புதிய சர்வே எண்கள். 70/4பி, 4சி, 4டி, 4ஏ1, 4ஏ2 மற்றும் 4ஏ3 ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அதில் குறிப்பிடவில்லை. ஆனால் சர்வே எண்.70/1 ஆகும். வா.சா.ஆ.10 கிரய பத்திரத்தில் சர்வே எண்.64/2 மற்றும் பைமாஷ் நம்பர் 1265/25 (11வது தாக்கு) என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், சர்வே எண்.64/2ம் சர்வே எண்.70/1ம் ஒரே சர்வே எண் என்று காண்பிப்பதற்கு வருவாய் துறை ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இரண்டு சர்வே எண்களும் வெவ்வேறானது. வா.சா.ஆ.10 கிரய பத்திரம் 1962ல் இருந்து இன்றைய தேதி வரையில் என் மாமனார் பெயரிலோ அல்லது வாதிகள் பெயரிலோ உள்ள வருவாய் துறை ஆவணங்களான பட்டா, சிட்டா, அடங்கல்

ஆகியவற்றை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. வழக்கு சொத்து விவரத்தில் சர்வே எண்கள் 1957ல் உட்பிரிவுகள் செய்யப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.10 FMB வரைபடத்தில் சர்வே எண்.70/1 குறிப்பிடப்படவில்லை என்றால் குறிப்பிடவில்லை, அதை மாற்றி தருமாறு பரிகாரம் கேட்டுள்ளேன். சர்வே எண் பிழையாக உள்ளது என்று எந்த வருடம் தெரியவந்தது என்றால் 2007ல் எங்களுக்கு தெரியவந்தது. 2007ல் தெரியவந்தபோது பிழைதிருத்தல் பத்திரம் எழுதுவதற்கு ஏதாவது முயற்சி செய்தேனா என்றால் இல்லை. 2007ல் எனது பத்திரத்தில் பிழை உள்ளது என்று நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் 2007ல் வழக்கு தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.25 சோழிங்கநல்லூர் வட்டாட்சியர், தாம்பரம் வருவாய்கோட்ட அலுவலருக்கு அனுப்பிய கடிதம் என்றால் சரிதான். வா.சா.ஆ.25 ஆவணம் எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் எனது வழக்கறிஞர் வாங்கியிருப்பார் அல்லது எனது நண்பர்கள் வாங்கியிருப்பார்கள். வா.சா.ஆ.25 ஆவணமானது மனு தாக்கல் செய்யப்பட்டு வாங்கப்பட்டதா அல்லது தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் வாங்கப்பட்டதா என்றால் தெரியவில்லை. வழக்கு சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் மடிப்பாக்கம் கிராமத்தில் உள்ளது. வா.சா.ஆ.25 கடிதமானது கோவிலம்பாக்கம் கிராமத்திற்காக கொடுக்கப்பட்ட கடிதம் என்றால் சாட்சி வா.சா.ஆ.25 கடிதத்தை பார்த்து கோவிலம்பாக்கம் கிராமம் என்று குறிப்பிடப்பட்டுள்ளதாக கூறுகிறார். வா.சா.ஆ.25 ஆவணத்தில புலன்களுக்கான ஏ ரெஜிஸ்டர், 10(1) சிட்டா, அடங்கல் ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு சொல்லப்பட்டுள்ளது. அவ்வாறு இணைப்புகள் எதுவும் வா.சா.ஆ.25ல் உள்ளதா என்றால் இல்லை. ஒரு சொத்தை அடையாளம் காண்பதற்கும், அந்த சொத்தின் சர்வே எண்ணை காண்பதற்கும் யாருக்கு அதிகாரம் உள்ளது என்றால் Revenue Inspector மற்றும் RDO-க்கு அதிகாரம் உள்ளது. நான் வாதிகள் மற்றும் அவர்களுடைய தகப்பனார் பெயரில் பட்டா மாற்றம் செய்வதற்கு வருவாய் துறையில் மனுக்கள் ஏதும் கொடுத்தோமா என்றால் 2007ல் வருவாய் துறையில் மனுக்கள் கொடுத்தோம். அவ்வாறு மனுக்கள் கொடுத்த பிறகு வாதிகள் பெயரில் பட்டா வழங்கப்பட்டதா என்றால் பட்டா கொடுக்கவில்லை, RDO கடிதத்தில் பட்டா கொடுக்காததற்கான காரணம்

உள்ளது. வா.சா.ஆ.26ன் அடிப்படையில் எங்களுக்கு பட்டா கொடுக்கவில்லை என்று வா.சா.ஆ.26 உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. சொத்துக்களை அடையாளம் காண்பிக்க நிலஅளவையர்தான் இடத்தை அளந்து காண்பிப்பார் என்றால் சரிதான். வா.சா.ஆ.26 உத்தரவில் பிரதிவாதிகளையோ அல்லது பிரதிவாதிகளுக்கு கிரயம ் கொடுத்தவர்களை அழைத்து விசாரித்து உத்தரவு போடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால ் பிரதிவாதிகளை விசாரித்தார்களா என்று எனக்கு தெரியாது. யார், யாரை விசாரித்தார்கள் என்பதும் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.26 உத்தரவானது எனக்கும், முதல் வாதிக்கும், வட்டாட்சியர் சோழிங்கநல்லூருக்கும் அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.26 உத்தரவானது பிரதிவாதிகளுக்கோ அல்லது பிரதிவாதிகளுக்கு கிரயம ் கொடுத்தவர்களுக்கோ, பட்டாதாரர்களுக்கோ நகல் அனுப்பப்பட்டதாக உள்ளதா என்றால் இல்லை. பிரதிவாதிகளை விசாரிக்காமல் போடப்பட்ட உத்தரவானது பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. தாசில்தாருக்கு அனுபவத்தை சொல்வதற்கோ, உரிமையை தீர்மானிக்கவும் எந்த அதிகாரமும் கொடுக்கப்படவில்லை என்றால் அதை நான் மறுக்கிறேன். தாவா சொத்துக்களை சுற்றி நான்கு புறமும் சுற்றுசுவர் அமைக்கப்பட்டுள்ளதாக வருவாய் துறையினர் சொல்லியுள்ளது என்னுடைய வழக்கில் சொத்து விவரத்தில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் வழக்குரையில் சொத்து விவரத்தில் நான்கு புறமும் சுற்றுசுவர் இருப்பதாக சொல்லப்படவில்லை, ஆனால் நான்கு மால்கள் சொல்லப்பட்டுள்ளது. தாவா ஏ அட்டவணை சொத்தில் சொத்து விவரத்தில் சதாசிவநகா் எக்ஸ்டென்சன் லேஅவுட்தான் தற்போது ராம்நகா் எக்ஸ்டென்சன் என்று சொல்லியுள்ளதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என்னுடைய கிரய பத்திரத்தில ் இணைக்கப்பட்டுள்ள Annexure-ல ் மடிப்பாக்கம ் கிராம வரைபடத்தில் சொல்லப்பட்டுள்ளது. என் மாமனார் வாங்கிய கிரய பத்திரத்தில் சதாசிவநகர் எக்ஸ்டென்சன் லேஅவுட் என்பது ராஜகோபாலபுரம் என்று உள்ளது என்றால் சரிதான். ஆனால் வழக்கில் ஏ அட்டவணை சொத்து விவரத்தில் ராஜகோபாலபுரம் என்று குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிடவில்லை. வா.சா.ஆ.10 கிரய பத்திரத்தின் அசல் ஆவணம் யாரிடம் உள்ளது என்றால் 1ம் வாதியிடம் உள்ளது. வா.சா.ஆ.10ல் இணைக்கப்பட்டுள்ள வரைபடம் அதில்

இணைக்கப்படவில்லை என்றால் இணைக்கப்படவில்லை. வழக்கில் ஏ அட்டவணை சொத்தின் 4 பக்க எல்லையில் வடக்கில் பிளாட் நம்பர் 440, 441, 442 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கில் ஏ அட்டவணை சொத்தின் 4 பக்க எல்லையில் கிழக்கு பக்கம் பொன்னப்ப நாயக்கர் மற்றும் 30 அடி ரோடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கில் ஏ அட்டவணை சொத்தின் 4 பக்க எல்லையில் தெற்கு பக்கம் 1st மெயின் ரோடு, தற்போது வித்யா சுரபி தெரு, என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கில் ஏ அட்டவணை சொத்தின் 4 பக்க எல்லையில் மேற்கு பக்கம் பிளாட் நம்பர் 403 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.10 கிரய பத்திரத்தில் சொத்து விவரத்தில் கிழக்கு பக்கத்தில் 30 அடி ரோடு குறித்து சொல்லப்படவில்லை என்றால் பத்திரத்தில் சொல்லவில்லை, ஆனால் தற்போது கிழக்கு பக்கத்தில் 30 அடி ரோடு உள்ளது. அவ்வாறு தற்போது 30 அடி ரோடு உள்ளது என்பதை காண்பிக்க தற்போதைய FMB Sketch தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.10 கிரய பத்திரத்தில் சொத்து விவரத்தில் தெற்கு பக்கத்தில் 1st மெயின் ரோடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 1st மெயின் ரோடுதான் வித்யாசுரபி தெரு என்று காண்பிப்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் பிராது தாக்கல் செய்த போதே பட்டா, அடங்கல், SLR, FMB Sketch, A Register ஆகியவை வருவாய் துறை ஆவணங்கள் என்று தெரிந்த காரணத்தினால்தான் அதை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அடங்கலில் சொத்தில் யார் சுவாதீனத்தில் உள்ளார்கள் என்பதை காண்பிக்கும் ஆவணம் என்பதால், என் பெயரிலோ, வாதிகள் பெயரிலோ தாவா சொத்து சுவாதீனத்தில் உள்ளது என்பதை காண்பிக்க அடங்கல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அடங்கல் தாக்கல் செய்யவில்லை. சர்வே எண்.70/4ல், துரைசாமிக்கு பட்டா எண்.1742, 19 ஏர்ஸ் வழங்கப்பட்டுள்ளது என்றால் சாட்சி வழக்குரை பட்டியல் ஆவணம் 34யை பார்த்து சர்வே எண்.70/1ஏ3 ஆனது 70/4 ஆக மாறியுள்ளது. நிலஉடைமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்ட UDR பட்டா என்றால் சரிதான். மேற்படி UDR பட்டா தமிழ்நாட்டில் 1985 முதல் 1989 வரை பரவலாக வழங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த காலகட்டத்தில் சொத்தில் யார் உரிமையாளர்களாக இருந்தார்களோ அவர்கள்

பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்றால் துரைசாமி நாயக்கர் சொத்தை விற்ற பிறகு அதன் பிறகு பிள்ளைகள் யாருக்கும் உரிமையில்லை. என் மாமனார் வாங்கிய சொத்து சர்வே எண்.64/2 வாங்கியதால், சர்வே எண்.70/1ல் எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல, ஆனால் சர்வே எண் தவறாக உள்ளது. நிலஉடைமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் என் மாமனார் சுவாதீனத்தில் இல்லாததால் என் மாமனார் பெயரில் பட்டா கொடுக்கவில்லை என்றால் என் மாமனார் பட்டா கேட்காததால் கொடுக்கவில்லை. அது என் மாமனார் சொத்துதான். வா.சா.ஆ.12 உயிலானது 18.7.1990 அன்று நம்பர் 27, G.N.செட்டி தெரு, திநகர், சென்னையில் எழுதப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். நான் எந்த மதத்தை சார்ந்தவர் என்றால் நான் இந்து மதத்தை சார்ந்தவர். சென்னையில் உயில் எழுதப்பட்டால் அந்த உயில் probate செய்யவேண்டுமென்று உள்ளதால் அவ்வாறு உயிலை probate செய்வதற்கு நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. அவ்வாறு உயிலை probate செய்யவில்லை என்றால் அந்த உயிலை நீதிமன்றம் ஏற்றுக் கொள்ள இயலாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.12 உயிலின் அசல் உயிலை நான் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை, அசல் உயிலானது என்வசம் உள்ளது.

**(14 மற்றும் 15 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)**

14 மற்றும் 15 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

வா.சா.ஆ.12ல் என் மாமனார் எழுதி வைத்த உயிலில் ஏ அட்டவணை சொத்தில் கிழக்கு பக்கம் என்ன சொல்லப்பட்டுள்ளது என்றால் காலி இடம் பொன்னப்ப நாயக்கருக்கு சொந்தமானது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.12 உயிலில் தெற்கு பக்கம் முதல் பிரதான ரோடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.12 உயிலில் பி அட்டவணையில் மேற்கு பக்கம் ஸ்ரீசீனிவாசனுக்கும், சி அட்டவணை சொதிதுரு 1ம் வாதி தேவிக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.12 உயிலில் பி அட்டவணையில் ஸ்ரீசீனிவாசனுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தின் கிழக்கு பக்கம் 30 அடி ரோடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது, கிழக்கு பக்கமாக தேவிக்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்று குறிப்பிடப்பட்டிருக்கவேண்டும் ஆனால் உயிலில் தவறாக குறிப்பிட்டுள்ளார்கள். வழக்குரையில் சி அட்டவணை சொத்தில் கிழக்கு பக்கமாக 30 அடி ரோடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு சொல்லப்பட்டுள்ளது. வழக்குரையில் பி அட்டவணை சொத்தில் 4 பக்க எல்லைகள் குறிப்பிடப்படவில்லை என்றும், ஆனால் சி அட்டவணை சொத்திற்கு 4 பக்க எல்லைகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.12 உயிலில் என் மாமனாருக்கு பட்டா வழங்கப்பட்டது என்ற வாசகம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.12 உயிலில் 64/2 சர்வே மட்டும்தான் காண்பிக்கப்பட்டுள்ளது என்றும், சர்வே எண்.70/1, 70/2 ஆகிய சர்வே எண்கள் காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். அது குறித்துதான் பரிகாரம் கேட்டுள்ளோம். எங்களுக்கு சொத்தை கிரயம் கொடுத்தவர்களிடம் பிழை திருத்தம் பத்திரம் எழுதி கொடுக்குமாறு ஏதாவது பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. தாவா சொத்துக்கள் ராம்நகர், முதலாவது தெரு என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்தபோது தாவா சொத்தின் அரசு வழிக்காட்டி மதிப்பீடு ஒரு சதுர அடிக்கு ரூ.3500/- என்றால் சரிதான். சாட்சி அரசு வழிகாட்டி மதிப்பீட்டினை பார்த்து சரியென ஒப்புக்கொண்டதால் அந்த அரசு வழிக்காட்டி மதிப்பீடு பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் கோரியுள்ள பரிகாரம் குறைவான மதிப்பீடு குறிப்பிட்டுள்ளதால், இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல, என் வழக்கறிஞர் கூறியதன் அடிப்படையில்தான் வழக்கை

மதிப்பீடு செய்து அதற்கான நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளேன். வா.சா.ஆ.4 முதல் வா.சா.ஆ.9 கிரய பத்திரங்களை எதற்காக இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சாட்சி ஆவணங்களை பார்த்து வா.சா.ஆ.4 கிரய பத்திரமானது துரைசாமி நாயக்கர் கோபிநாத் முதலியாருக்கு விற்று விட்டதால் 7 முதல் 9 பிரதிவாதிகளுக்கு எந்த உரிமையும் கிடையாது என்பதால் மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.5 முதல் வா.சா.ஆ.9 கிரய பத்திரங்கள் என்னுடைய சொத்திற்கு 4 எல்லைகளை காண்பிக்க வேண்டிய தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.4 முதல˙ வா.சா.ஆ.9 கிரய பத்திரங்களின் உரிமையாளர்களை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்க போகிறேனா என்றால் இல்லை. அவ்வாறு கிரயம் வாங்கிய நபர்களை சாட்சியாக விசாரிக்காத காரணத்தினால் மேற்படி வா.சா.ஆ.5 முதல் வா.சா.ஆ.9 கிரய பத்திரங்கள் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 மற்றும் வா.சா.ஆ.7 கிரய பத்திரங்களின் 4 பக்க எல்லைகளில் தெற்கு பக்கம் ரோடு என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றும், கிழக்கு பக்கம் ரோடு என்று காண்பிக்கப்படவில்லை என்றால் சாட்சி ஆவணங்களை பார்த்து கிழக்கு பக்கம் ரோடு என்று காண்பிக்கப்படவில்லை. நான் பக்கத்து பிளாட்டுகளில் இருப்பவர்களின் கிரய பத்திரங்களான வா.சா.ஆ.6 மற்றும் வா.சா.ஆ.7 கிரய ஆவணங்களில் மேற்படி கோபிநாத் என்பவர் டி.எஸ்.சுவாமிநாத ஐயர், முருகேச நாயக்கர், மாரி நாயக்கர், துரைசாமி நாயக்கர், தேவராஜ ரெட்டியார் மற்றும் பலர் ஆகியோர்களிடமிருந்து சர்வே எண்கள்.69, 70/1, 70/2, 70/3 மற்றும் 101ல் அடங்கிய 45 ஏக்கர் 61 சென்ட் கிரயம் வாங்கியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் கிரய பத்திரத்தில் அவ்வாறு சொல்லப்பட்டுள்ளது. என் மாமனார் கிரயம் வாங்கிய வா.சா.ஆ.10 ஆவண எண்.1121/1961, சர்வே எண்.64/2 வீரம்மாள் என்பவரிடமிருந்து 27.6.1961ல் 1-1-14 காணி நிலம் கிரயம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 மற்றும் வா.சா.ஆ.7 கிரயம் வாங்கிய நபர்களும், வா.சா.ஆ.10 கிரய வாங்கிய நபரும் வெவ்வேறான நபர்கள் என்றால் சரியல்ல, அதனால்தான் வழக்கு போட்டுள்ளேன். 27.6.1961 தேதியிட்ட ஆவண எண்.1121/ 1961 கிரய பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சாட்சி வழக்குரையை பார்வையிட்டு தாக்கல் செய்துள்ளேன் என்று கூறுகிறார். அந்த ஆவணம்தான் வா.சா.ஆ.8 ஆகும். வா.சா.ஆ.8 ஆவணத்தின் எண் என்னவென்றால் ஆவண எண்.2982/1961 என்று

குறிப்பிடப்பட்டுள்ளது.



வா.சா.ஆ.2 ஆவணத்தின் சொத்து விவரத்தில் பைமாஸ் நம்பர்களோ, சர்வே எண்களோ குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்படடிருக்கும், ஆனால் வா.சா.ஆ.2 ஆவணத்தை என்னால் படிக்க இயலவில்லை. வா.சா.ஆ.2 ஆவணத்தில் சர்வே எண்.64/2 என்று இருக்கும். வா.சா.ஆ.2 ஆவணத்தில் பைமாஸ் நம்பர் போடப்பட்டுள்ளதா என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து வா.சா.ஆ.2 ஆவணத்தை என்னால் படிக்க இயலவில்லை. வா.சா.ஆ.11 ஆவணம் எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் கே.பி.கோபிநாத் என்பவர் என் மாமனாருக்கு விற்ற கிரய பத்திரத்தில் உடன் இணைக்கப்பட்டிருந்த Annexture ஆகும். வா.சா.ஆ.11ல் சர்வே எண்கள் குறிப்பிடப்பட்டு மேற்படி வரைபடம் உள்ளதா என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து அந்த லேஅவுட்டில் சர்வே எண்கள் கிடையாது என்று கூறுகிறார். சர்வே எண்.404 என்பது சர்வே எண்.64/2 மற்றும ் சர்வே எண்.70/1 என்று வா.சா.ஆ.11ல் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வழக்குரையுடன் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் கிழக்கில் ரோடு என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.10 சொத்து விவரத்திலும் மற்றும் வா.சா.ஆ.12 உயிலில் ஏ அட்டவணை சொத்திலும் கிழக்கு பக்கம் ரோடு என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் கிழக்கு பக்கத்தில் ரோடு என்று குறிப்பிடப்படவில்லை. தாவா ஏ அட்டவணை சொத்தை நில அளவையர் வைத்து, அளந்து வரைபடம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நீதிமன்றத்தின் மூலம் ஆணையர் நியமித்து சர்வேயர் மூலம் வழக்கு சொத்தை அளக்க மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் மனு தாக்கல் செய்யவில்லை. 2007லேயே வருவாய் துறைக்கு மனு கொடுத்துள்ள நிலையில், 2007ம் ஆண்டு தாவா சொத்திற்கு யார் பெயரில் பட்டா இருந்தது என்று எனக்கு தெரிய வந்ததா என்றால் அப்பொழுது தெரியவரவில்லை, ஆனால் சர்வே எண் தவறாக இருந்தது என்று தெரியவந்தது. 2007ல் வில்லங்கம் போட்டு பார்த்தேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. 14, 15 பிரதிவாதிகள் கிரயம் வாங்கியுள்ள சொத்தும், பிளாட் நம்பர் 404ம் ஒரே சொத்துக்கள் என்பதை காண்பிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் 14, 15 பிரதிவாதிகள் உட்பிரிவுகள் அடங்கிய சொத்துக்களை வாங்கியதால் நாங்கள் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. நில உரிமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் சர்வே எண்.70/1 ஆனது 1ஏ1, 1பி,

1ஏ2, 1ஏ3, 1ஏ3, 2, 3 (part) உட்பிரிவுகள் செய்யப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு உட்புரிவு செய்யப்படவில்லை. துரைசாமிக்கு சர்வே எண்.70/4 ஆனது 19 ஏர்ஸ் அல்லது 47 சென்ட் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். துரைசாமி நாயக்கர் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் 47 சென்ட் இருந்ததால்தான் பட்டா எண்.1742 வழங்கப்பட்டது என்றால் சரியல்ல, துரைசாமி நாயக்கர் 1961ல் சொத்தை விற்றுவிட்டார், அதனால் துரைசாமி நாயக்கர் பெயரில் பட்டா வழங்க முடியாது. 1985 முதல் 1989களில் துரைசாமி பெயரில் கொடுக்கப்பட்ட பட்டா தவறானது என்று எனது மாமனாரோ, வாதிகளோ நிலவுடைமை திட்டத்தின் கீழ் பட்டா கொடுத்தது தவறானது என்று RDO-விடம் மனு கொடுத்தோமா என்றால் 2009ல் மனு கொடுத்தோம். அந்த மனுவின் தேதி தெரியுமா என்றால் தேதி தெரியவில்லை. RDO விசாரணைக்கு பிறகு பட்டா எங்களுக்கு கொடுக்கவில்லை என்றால் சர்வே எண் தவறாக இருப்பதால் நீதிமன்றத்தை அனுகுமாறு சொன்னதால் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தோம். 19.11.1999 அன்று துரைசாமி நாயக்கரின் வாரிசுகள் சேர்ந்து சர்வே எண்.70/4, 47 சென்ட், 1776 சதுர அடியை 14ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.14 கிரய பத்திரம் மூலம் கிரயம் கொடுத்துள்ள கிரய பத்திரத்தில் கிழக்கு பக்கத்தில் 30 அடி ரோடு என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் கிரய பத்திரத்தில் அவ்வாறு காண்பிக்கப்பட்டுள்ளது. கிரயம் பெற்ற 14ம் பிரதிவாதிக்கு சர்வே எண்.70/4 ஆனது சர்வே எண்.70/4சி என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் உட்பிரிவு செய்யப்பட்டது. அந்த ஆவணத்தை சாட்சி ஒப்புக்கொண்டதால் அந்த பட்டா பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வா.சா.ஆ.14 கிரய பத்திரம் முன்னிலைக்கு 14ம் பிரதிவாதி மின் இணைப்பு பெற்று வீடு கட்டி வசித்து வருகிறார் என்றால் 2010ம் ஆண்டு காலி இடமாகத்தான் இருந்தது, வழக்கு நிலுவையில் இருக்கும்போது 14ம் பிரதிவாதி வீடு கட்டியுள்ளார். 14 மற்றும் 15 பிரதிவாதிகளுக்கு நீதிமன்றத்தில் இருந்து சம்மன் அனுப்பப்பட்டதா என்றால் இல்லை. 14ம் பிரதிவாதி வீடு கட்டிய விவரம் எனக்கு எப்பொழுது தெரியவந்தது என்றால் வீடு கட்டிய விவரம் எனக்கு தெரியும், எந்த வருடம் என்று எனக்கு தெரியவில்லை. 14ம் பிரதிவாதி வீடு கட்டிய விவரம் எனக்கு தெரிந்த பிறகு காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தேனா

நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை, மின்சார வாரியம் மற்றும் CMDA-ல் புகார் கொடுத்தேன். அவ்வாறு நான் கொடுத்த புகாரை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. 1999ல் கிரயம் வாங்கிய பிறகு 14ம் பிரதிவாதியின் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்து வருகிறது என்றால் கிடையாது. தாவா சொத்து என் மாமனார் பெயரிலோ, வாதிகளின் பெயரிலோ இருந்தது என்பதற்கு பட்டா, சிட்டா, அடங்கல் ஆகிய ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. 14ம் பிரதிவாதி வீடு கட்டியதற்கு சொத்தின் சுவாதீனத்தை ஒப்படைக்குமாறு பரிகாரம் கேட்காததால் வழக்கு தள்ளுபடிக்கு உகந்தது என்றால் சரியல்ல. 19.11.1999 அன்று துரைசாமி நாயக்கரின் வாரிசுகள் எல்லோரும் சேர்ந்து 15ம் பிரதிவாதிக்கு கிரயம் செய்து கொடுத்த பத்திரம்தான் வா.சா.ஆ.15 என்றால் ஆமாம். வா.சா.ஆ.15ல் கிழக்கு பக்கம் 30 அடி ரோடு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 15ம் பிரதிவாதி கிரயம் பெற்ற சொத்தின் சர்வே எண்.70/4டி என்று உட்பிரிவு செய்யப்பட்டு பட்டா வழங்கப்பட்ட ஆவணம்தான் தற்போது சாட்சியிடம் காண்பிக்கப்படும் ஆவணம் என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து சரியென்று ஒப்புக்கொண்டதால் அந்த பட்டா பி.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடைய வாதத்தின்படி 15ம் பிரதிவாதி வழக்கு நிலுவையில் இருக்கும்போது சொத்தில் அத்துமீறி நுழைந்து வீடு கட்டிவிட்டார் என்பதுதான் என்றால் சரிதான். 15ம் பிரதிவாதி வீடு கட்டிய விவரம் எனக்கு தெரிந்த பிறகு காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை, மின்சார வாரியம் மற்றும் CMDA-ல் புகார் கொடுத்தேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் 14, 15 பிரதிவாதிகள் வழக்கு நிலுவையில் இருக்கும்போது அத்துமீறி நுழைந்து வீடு கட்டிவிட்டார்கள் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. வழக்கு சொத்திற்கும், வா.சா.ஆ.10ல் சொல்லப்பட்டுள்ள சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் தவறு. சர்வே எண்.64/2யை கிரயம் பெற்றுவிட்டு சர்வே எண்.70/1 மற்றும் 70/4க்காக தவறாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.70/4ல் அடங்கியுள்ள எல்லா சொத்துக்களையும் துரைசாமி நாயக்கரின் வாரிசுகள் 1999லேயே மொத்த விஸ்தீரணத்தையும் 14 மற்றும் 15

பிரதிவாதிகளுக்கு கிரயம் கொடுத்துவிட்டார்கள் என்று சொன்னால் துரைசாமி நாயக்கரின் வாரிசுகளுக்கு சொத்துக்களை விற்பதற்கு எந்த உரிமையும் இல்லை. உரிய உரிமையாளர்களிடம் இருந்து 14 மற்றும் 15 பிரதிவாதிகள் பெற்ற கிரயம் நல்லெண்ணத்தின் அடிப்படையில் பெற்ற கிரயம் என்பதாலும், அவர்களது அனுபவத்திலும், சுவாதீனத்திலும் உள்ளது என்றால் சரியல்ல. நான் தவறான சொத்து விவரங்களை காண்பித்து தவறான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கானது காலதோஷத்தால் பாதிக்கப்பட்டது என்றால் சரியல்ல. தவறான சங்கதிகள் அளித்து சாட்சியம் அளிப்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று சொன்னால் சரியல்ல.

**7, 8, 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

7, 8, 9 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வா.சா.1 சாட்சியை குறுக்கு விசாரணை இல்லை என்று கூறியது பதிவு செய்யப்பட்டது.

**12ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

(12ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இல்லாததால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

**12 மற்றும் 26ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் இந்த வழக்கின் 2ம் வாதியின் கணவர் என்றால் சரிதான். வாதிகள் எனக்கு பொது அதிகார பத்திரம் எந்த வருடம் எழுதிக் கொடுத்தார்கள் என்றால் 2010ம் ஆண்டு எழுதி கொடுத்தார்கள். 2ம் வாதியை எந்த வருடம் திருமணம் செய்தேன் என்றால் 1990ல் திருமணம் செய்தேன். நான் திருமணம் ஆனவுடன் அமெரிக்கா சென்று விட்டேனா என்றால் 1984ல் இருந்து நான் அமெரிக்காவில் வசித்து வருகிறேன். என் திருமணத்திற்கு முன்பு வழக்கு சொத்து சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். முதல் வாதி சென்னையில்தான் வசிக்கிறார் என்றால் முதல் வாதி அமெரிக்காவில் இருந்தார், பிறகு சென்னை வந்து விட்டார். இரண்டு வாதிகளுமே அமெரிக்காவில் வசித்தார்கள். முதல் வாதி எப்பொழுது சென்னைக்கு வந்தார் என்றால் ஞாபகமில்லை. இந்த வழக்கை என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் மாமனாரின் கிரய பத்திரத்தில் உள்ள சர்வே எண் தவறாக உள்ளது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 7 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் 7 முதல் 9 பிரதிவாதிகள், 11 மற்றும் 12ம் பிரதிவாதிகளுக்கு எழுதிக் கொடுத்த கிரய பத்திரம் செல்லாது என்று பரிகாரம் கோரியுள்ளேன். இந்த வழக்கின் 11ம் பிரதிவாதி இறந்துவிட்டார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். 11ம் பிரதிவாதியின் வாரிசுகளை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளேனா என்றால் 11ம் பிரதிவாதியின் மனைவி 12ம் பிரதிவாதியாக ஏற்கனவே தரப்பினராக உள்ளார், அவரது வாரிசுதான் 26வது பிரதிவாதி ஆவார். 11ம் பிரதிவாதி இறந்த பிறகு 26வது பிரதிவாதியை சேர்த்து என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் சேர்த்து எழுதப்பட்டுள்ளது. 11ம் பிரதிவாதி இறந்த பிறகு 12 மற்றும் 26வது பிரதிவாதிதான் வாரிசுகள் என்று என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகமில்லை. வா.சா.ஆ.10ல் 2வதுபக்கத்தில் என் மாமனாருக்கு கிரயம் கொடுத்த கோபிநாதன் யார் மூலமாக எந்த ஆவணத்தின் மூலமாக வாங்கியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் வீரம்மாள் என்பவர் மூலமாக கிரயம் பெற்றுள்ளார், அந்த கிரய ஆவணத்தின் எண்.1121/1941 ஆகும். அந்த கிரய பத்திரம் வா.சா.ஆ.2 ஆகும். வா.சா.ஆ.8 கிரய ஆவணமானது வீரம்மாள், கோபிநாதனுக்கு கிரய ஆவண எண்.2982/1961 மூலம்தான் கிரயம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.8

ஆவணத்தில் தாய் பத்திரம் குறித்து சொல்லப்பட்டுள்ளது, மூல பத்திரம் குறித்து சொல்லப்படவில்லை. வா.சா.ஆ.2, வா.சா.ஆ.8 மற்றும் வா.சா.ஆ.10 ஆகிய கிரய பத்திரங்கள் சர்வே எண்.64/2க்கு உரியது என்றால் சரிதான். வா.சா.ஆ.10 கிரய ஆவணத்தின் சொத்து விவரத்தில் எந்த நகர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சதாசிவம் நகர் எக்ஸ்டென்ஷன் மற்றும் ராஜகோபாலன் நகர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. என் வழக்குரை பத்தி 3 மற்றும் ஏ அட்டவணை சொத்தில் சதாசிவம் நகர் எக்ஸ்டென்ஷன் லேஅவுட் மற்றும் ராஜகோபாலன் நகர், தற்போது ராம்நகர் எக்ஸ்டென்ஷன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் குறிப்பிட்டுள்ளேன். சதாசிவம் நகர் எக்ஸ்டென்ஷன்தான் தற்போது ராம்நகர் எக்ஸ்டென்ஷன் என்று மாறிவிட்டது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணம் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.10 சொத்து விவரத்தில் பைமாஸ் நம்பர் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் பைமாஸ் நம்பர் 1265/25 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் என்னுடைய வழக்குரை மற்றும் சொத்து விவரத்தில் பைமாஸ் நம்பர் 1265/25 குறித்து குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது வழக்குரை பத்தி 4 மற்றும் 5ல் சர்வே எண்.64/2க்கு பைமாஸ் நம்பர் 1262/15 என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பைமாஸ் நம்பர் 1262/15 மற்றும் பைமாஸ் நம்பர் 1265/25 சர்வே எண்.64/2 என்பதை காண்பிப்பதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் SLR தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய வழக்குரை பத்தி 3லும் மற்றும் ஏ அட்டவணை சொத்திலும் பழைய பைமாஸ் நம்பர் 1265/7 என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் குறிப்பிட்டுள்ளேன். சர்வே எண். 64, 65, 69, 70/1, 70/2, 70/3, 99, 101 ஆகிய எண்களில் லேஅவுட் போடப்பட்டதாக என் வழக்குரையில் சொல்லியுள்ளது குறித்து வா.சா.ஆ.10 சொத்து விவரத்தில் மேற்படி சர்வே எண்களின் லேஅவுட் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சொல்லவில்லை.

(12 மற்றும் 26ம் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

<u>12 மற்றும் 26 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

எனது வழக்குரையில் 3வது பத்தியிலும், ஏ அட்டவணை சொத்திலும் வடக்கில் மனை எண்கள் 440, 441, 442 என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். கிழக்கில் பொன்னப்ப நாயக்கருக்கு சொந்தமான இடம் மற்றும் 30 அடி ரோடு என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் என் மாமனார் வாங்கிய வா.சா.ஆ.10 கிரய பத்திரத்தின் சொத்து விவரத்தில் கிழக்கு பகுதியில் பொன்னப்ப நாயக்கருக்கு சொந்தமான நிலம் என்று மட்டும்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், பொன்னப்ப நாயக்கருக்கு சொந்தமான காலி நிலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நான் வழக்கில் குறிப்பிட்டுள்ள 30 அடி ரோடு எப்படி வந்தது என்றால் 30 அடி தற்போது உள்ளது. பொன்னப்ப நாயக்கர் தானமாக கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்தின் கிழக்கு பக்கத்தில் 30 அடி ரோடு உள்ளது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.10 கிரய பத்திரத்தில் சொத்து விவரத்தில் கிழக்கு பக்கத்தில் 30 அடி ரோடு என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வழக்குரை பத்தி 3 மற்றும் ஏ அட்டவனை சொத்தில் தெற்கு பக்கத்தில் முதல் மெயின் ரோடு தற்போது வித்யாசரபி தெரு என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து சரிதான் என்று கூறுகிறார். ஆனால் வா.சா.ஆ.10ல் தெற்கு பக்கத்தில் முதல் மெயின்ரோடு என்று மட்டும்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி முதல் மெயின்ரோடு தான் தற்போது வித்யாசரபி தெரு என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணம் தாக்கல் செய்யவில்லை. வாதிகள் ஏ அட்டவணை சொத்தில் எதன் மூலம் உரிமை பெற்றார்கள் என்றால் என் மாமனார் எழுதி கொடுத்த வா.சா.ஆ.12 உயில் மூலம் உரிமை பெற்றார்கள். வா.சா.ஆ.12 உயிலில் என்ன சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சர்வே எண்.64/2 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.12 உயிலில் இரண்டு அட்டவணை சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அதில் ஏ அட்டவணை சொத்து முதல் வாதிக்கும், பி அட்டவணை சொத்து 2ம் வாதிக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் எனது வழக்குரையில் இரண்டு சொத்துக்களையும் சேர்த்து ஒன்றாகத்தான் காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். எனது வழக்குரையில் ஏ அட்டவணை சொத்தின் கிழக்கு பக்கத்தில் பொன்னப்ப நாயக்கரின் சொந்தமான நிலம் மற்றும் 30 அடி ரோடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது வழக்குரையில் ஏ அட்டவணை சொத்தில் தெற்கு பக்கத்தில் முதல் மெயின்ரோடு, தற்போது வித்யாசரபி தெரு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.12 உயிலில் 30 அடி ரோடு மற்றும் வித்யாசரபி தெரு என்று குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிடவில்லை, மெயின்ரோடு என்றுதான் சொல்லப்பட்டுள்ளது. வா.சா.ஆ.12 உயிலில் 2ம் வாதிக்கு கொடுக்கப்பட்ட பி அட்டவணை சொத்தில் கிழக்கு பக்கத்தில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து கிழக்கு பக்கத்தில் என் மனைவியின் பெயர் உள்ளது, அது தவறாகும். மேற்கு பக்கத்தில் என் மனைவிக்கு தானமாக கொடுத்த இடம் என்று சொல்லப்பட்டுள்ளது சரிதான். வா.சா.ஆ.12 உயிலானது சென்னை, தியாகராயநகர், சார்பதிவகத்தில்

பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சென்னை மாநகரத்தில் பதிவு செய்யப்பட்ட உயில் என்பதால் probate செய்வதற்கு நடவடிக்கை எடுத்தேனா என்றால் இது வரை எடுக்கவில்லை. வா.சா.ஆ.12 உயிலை probate செய்யாததால் உயிலை நடைமுறைப்படுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல, உயில் இல்லை என்றாலும் வாதிகளுக்குதான் வழக்கு சொத்து உரிமையானதாகும். வா.சா.ஆ.12 உயிலின் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. அசல் உயிலானது எங்குள்ளது என்றால் என்னிடம்தான் உள்ளது. வா.சா.ஆ.12 உயில் எழுதும்போதும் என் மாமனார் பட்டா வாங்கவில்லை என்றால் வாங்கவில்லை. வா.சா.ஆ.10ல் சர்வே எண் தவறுதலாக உள்ளது என்று எப்பொழுது எனக்கு தெரியவந்தது என்றால் 2009ம் ஆண்டில் தாம்பரம் ஆர்.டி.ஓ.விடம் மனு கொடுக்கும்போதுதான் தெரியவந்தது. அந்த கொடுத்த புகார் மனுவை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. ஆனால் எனது வழக்குரை பத்தி 11ல் நான் 2007ல் பட்டா வாங்குவதற்காக மனு போட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். 2007ல் தெரியவந்தவுடன் சட்டப்படி பிழைதிருத்தல் பத்திரம் எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தேனா என்றால் இரண்டு ஆவணங்கள் பதியப்பட்டுள்ளதால் நீதிமன்றத்திற்குதான் செல்ல வேண்டுமென்று சொன்னதால் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. நான் எனது ஆவணத்தில் பிழை இருப்பது தெரிந்தவுடன் எங்களுக்கு சொத்தை விற்றவர்களுக்கோ அல்லது அவர்களது வாரிசுகளான 1 முதல் 7 பிரதிவாதிகளுக்கோ அறிவிப்பு எதுவும் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. 2007ல் தெரியவந்தவுடன் 1 முதல் 7 பிரதிவாதிகளிடம் பிழைதிருத்தல் பத்திரம் எழுதி தருமாறு 3 ஆண்டு காலத்திற்குள் வழக்கு ஏதாவது தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நான் 2010க்குள் வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டுமென்றும், அவ்வாறு தாக்கல் செய்யாததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.25 எனக்கு வந்த அறிக்கையா என்றால் தாசில்தார், ஆர்.டி.ஓ-க்கு அனுப்பிய அறிக்கையாகும். வா.சா.ஆ.25 எனக்கு எப்படி வந்தது என்றால் எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ.25 எந்த அடிப்படையில் போடப்பட்டது என்றால் நான் 2009ல் கொடுத்த புகாரின் பேரில் போடப்பட்ட அறிக்கையாகும். வா.சா.ஆ.25ல் கோவிலம்பாக்கம் கிராமம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது தவறாகும். வா.சா.ஆ.25 எங்களுக்கு விற்றவர்களையும், அவர்களது வாரிசுதாரர்களான 1 முதல் 7 பிரதிவாதிகள் மற்றும் 11, 12 பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பி விசாரணை செய்தார்களா என்றால் விசாரித்திருப்பார்கள். வா.சா.ஆ.25ல் அவ்வாறு விசாரணை செய்தது குறித்து சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்படவில்லை. வா.சா.ஆ.25ல் மேற்படி புலன்களுக்கான பட்டா, சிட்டா, அடங்கல்இணைக்கப்பட்டுள்ளது என்று சொல்லப்பட்டுள்ளதில ் மேற்படி ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளதா என்றால் இணைக்கப்படவில்லை. வா.சா.ஆ.25ல் புல எண்.64/2 மற்றும் புல எண்.70/4 ஆகிய இரண்டு புல எண்கள் வெவ்வேறு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.25ல் பட்டா கொடுத்தார்களா என்றால் கொடுக்கவில்லை. வா.சா.ஆ.25 உத்தரவிற்கு பிறகு மேல்முறையீடு செய்தேனா என்றால் மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை, நீதிமன்றத்தில் இந்த வழக்கை

தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.26 வருவாய் கோட்ட அலுவலர் உத்தரவிற்கு பிறகு பட்டா கொடுத்தார்களா என்றால் பட்டா கொடுக்கவில்லை. வா.சா.ஆ.26 வருவாய் கோட்ட அலுவலர் உத்தரவிற்கு மேல்முறையீடு செய்தேனா என்றால் மேல்முறையீடு செய்யவில்லை, இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.26 பிரதிவாதிகளை விசாரணை செய்யாமல், ஆவணங்களை பரிசீலிக்காமல் போடப்பட்ட உத்தரவு என்றால் வா.சா.ஆ.26தான் கடைசியாக போடப்பட்ட உத்தராவாகும். வா.சா.ஆ.26ல் புல எண்.64/2 மற்றும் புல எண்.70/4 ஆகிய இரண்டு புல எண்கள் வெவ்வேறு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், வா.சா.ஆ.26ல் புல எண்.70/4ல் நாங்கள் சுவாதீனத்தில் இருப்பதாக வருவாய் கோட்ட அலுவலர் சொல்லியுள்ளார். சொத்தின் சர்வே எண்ணை காண்பிப்பதற்கும், அளப்பதற்கும் வருவாய் கோட்ட அலுவலருக்கும், ஆர்.டி.ஓ-விற்கும்தான் அதிகாரம் உள்ளது என்றால் தாசில்தாருக்கும் அதிகாரம் உள்ளது. சொத்தை அளப்பதற்கு நில அளவையருக்கு மட்டும்தான் அதிகாரம் உள்ளது என்றால் சரிதான்.

(12 மற்றும் 26ம் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)